# <u>பத்திரிக்கை குறிப்பு</u>

புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அரியலூர் பிரிவு அலுவலகத்தை அணுகி, தான் தனது தந்தை பெயரில் டி நமூனா அசைன்மென்ட் நிலத்தை கணினியில் பதிவேற்றி சிட்டா பெறுவதற்கு எலகுறிச்சி பிர்கா அலுவலகத்தில் விண்ணப்பித்ததாகவும், விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.செந்தில்குமார், வருவாய் ஆய்வாளர், எலகுறிச்சி பிர்கா மற்றும் திரு.கோவிந்தராஜ், கிராம நிர்வாக அலுவலர், எலகுறிச்சி கிராமம், அரியலூர் மாவட்டம், அவர்கள் தங்களுக்கு ரூ.20,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என்று கேட்பதாகவும், அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 12.08.2022 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு.செந்தில்குமார், வருவாய் ஆய்வாளர், எலகுறிச்சி பிர்கா மற்றும் திரு.கோவிந்தராஜ், கிராம நிர்வாக அலுவலர், எலகுறிச்சி கிராமம், அரியலூர் மாவட்டம் அவர்கள் புகார்தாரரிடமிருந்து ரூ.20,000/- கையூட்டாக கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

# PRESS NOTE

The complainant approached Vigilance & Anti – Corruption, Ariyalur Detachment, and gave complaint that for taking action to upload his father's 'D Memo Assignment Land' in computer chitta at the office of Elakurichi firka, Ariyalur District, for which Tr.Senthilkumar, Revenue Inspector, Elakurichi Firka and Tr.Govindaraj, Village Administrative Officer, Elakurichi Village, Ariyalur district demanded Rs.20,000/- as bribe for processing his application. In this connection a case was registered and a trap was organized today 12.08.2022.

During trap proceedings, Tr.Senthilkumar, Revenue Inspector, Elakurichi Firka and Tr.Govindaraj, Village Administrative Officer, reiterated their earlier demand and received the bribe amount of Rs.20,000/- from the complainant. Both accused were arrested.